RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s826

# கிறித்துவச் சிற்றிலக்கியங்களில் சமூக விடுதலை

த. ஜெயசீலி [அ, *]

[அ] தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்-635601, தமிழ்நாடு, இந்தியா.

# Social Emancipation in Christian Literatures

D. Jeyaseeli [a, *]

[a] PG Research Department of Tamil, Sacred Heart College (Autonomous), Tirupattur–635601, Tamil Nadu, India

* Corresponding Author: jeyaseelifma@gmail.com

Received: 27-04-2021
Revised: 01-05-2021
Accepted: 08-05-2022
Published: 21-07-2022

Check for updates

**ABSTRACT**

The contribution of Christians in the history of Tamil literature is immeasurable. The works of Christians in our country are as excellent as the works of Christian missionaries in the west. There are more than hundred christuva Citrilakiyankal collected by the researcher. Christian Literatures are considered to be liturgical, devotional, secular and social in the category of reformed literature and serve as reference points for Christian theological theological thinkers. Christuva Citrilakiyankal refer to the problems found in the Christian community has revolutionary works, but also point to the unparalled love and purity of Jesus Christ. And tell those who have seen Christ to live in purity. Jesus is the salvation, wisdom and incomparable lord. Simplicity, sweetness, speed and vivacity come together in Christian Literatures. Christian Literatures have given priority in singing about the characteristic interests of the Saints rather than high lighting their physical beauty. In the same way, many have sung the praises of the lord without singing much about the glory of which the lord dwells. In Tamil devotional literary tradition, Bridal mysticism is glorified. This tradition is also found in the Bible. Hero – Heroine is singing in imitation of God as lover and himself as lover.

**Keywords:** Christian Literatures, Bible, Social Emancipation, Tamil literature,

## முன்னுரை

“மனிதநேயம் அது மனத்தில் தோன்றும் மலர்ச்சி. இதயத்தில் சுரக்கும் ஈரம். தக்கார் தகவிலார் என வேறுபாடு கணிக்காது அனைவர்பாலும் பொங்கு அருள் உணர்ச்சி, கருணைப் பொழிவு”. என்கிறார் அன்னிதாமசு. கிறித்த சிற்றிலக்கியங்கள் மனித நல உணர்வுகளின் அடிப்படையில் எழுந்தவை. மனிதப்பண்புகளை மனிதனுக்கு உணர்த்தி, மனிதனை மனிதனாக்குகின்றது. மனித மாண்பினை உணர்த்தி, மனிதனோடும், இயற்கை, ஊர்வன, பறப்பன, நடப்பன என அனைத்து உயிரினங்களோடு உறவாட வைப்பதோடு மனிதநேயத்தை பறைசாற்றுகின்றது. மனித வாழ்வில் ஏற்படும் துன்பங்களுக்கும், போராட்டங்களுக்கும், கவலைகளுக்கும், பிரிவினைகளுக்கும் இருப்பவற்றைக்களை மேற்கொள்ளப் பெறும் முயற்சிகளை வெளிப்படுத்துகின்றன. அன்புக்காக ஏங்கி நிற்பவர்களுக்காகவும், ஏழை எளியவர்களுக்கும் பரிந்து பேசுவதும், துயரத்தைப் போக்குவதும் மனிதநேய செயல்பாடுகளாகவும் இயேசு மனித நேயத்தையும் தெய்வீகத்தன்மையையும் கிறித்தவ சிற்றிலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

கிறித்தவச் சிற்றிலக்கியங்களில் பல்வேறு பாவச்செயல்களைப் புரிந்தவர்களையும், பழி குற்றங்களை சுமந்தவர்களையும், தீய எண்ணங்களால் பலரது வாழ்க்கையினை அழித்தவர்களையும் திருவிவிலியம் சுட்டிக்காட்டுகின்றது. அத்தகைய தீய செயல்களால் உடல் உறுப்புகளை இழந்தவர்களே ஞான நொண்டிகளாக ஆசிரியர் தஞ்சை வேத நாயக சாஸ்திரியார் அழைக்கின்றார். அவர்களோடு தன்னை ஒப்பிட்டு, தான் ஒரு எல்லைக் கடந்த செருக்குற்ற ஞான நொண்டி என தனது குற்றங்களை ஏற்றுக்கொள்கிறார். சமூகத்தில் ஒவ்வொருவரும் தங்களது குற்றங்களை உணர்ந்து விடுபட்டால் சமூகம் நலமும், வளமும், செல்வமும் பெற்று வாழும். இதற்கு ஏற்ற மதிப்பீடுகளை கிறித்தவ சிற்றிலக்கியங்கள் நமக்கு முன்வைக்கின்றன. சமூக விடுதலை என்னும் தலைப்பில் இயேசு வாழ்ந்து காட்டிய இறையரசின் பண்புகள் சமுதாயத்தை மாற்றக்கூடியது. இறைமகன் மண்ணுலகம் வருவதால் அடிமை வாழ்வு அகன்றுவிடும். மனித குலத்திற்கு விடுதலை வழங்கும் என்பதைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தீயச்செயல்களே நோய்க்கு காரணம்

நம் சமூகத்தில் பெரும்பாலும் நோயினால் துன்பப்படுவோர் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றனர். எந்நோய்க்கும் தீவினைவேர் என்று கூறுவதன் மூலம் தீயச்செயல் ஆணிவேராக இருக்கிறது. அவ்வேர் ஆழமாக வேரூன்றி நோய் என்னும் இலைவிட்டு, கிளைகள் தோன்றி, பூத்து, காய்த்து பல்வேறு நோயாக குலுங்கும் என்று நயம்படக் கூறுகிறார் ஆசிரியர் வீரமாமுனிவர். என்பதை,

"எந்நோய்க்கும் தீவினைவேர் என்றிவைபோய் நோயொழியுமே

உன்னோய்க்கம் உன்வினையே ஓர்ந்தமுங்கண்ணீர் மருந்தாம்"

இயற்கையாக வரும் நோயை விட பாவச் செயல்களினாலும், பொறாமை, போட்டி மனப்பான்மை, பழிவாங்கும் உணர்வு போன்றவை ஆழமாவதால் உடலில் பல்வேறு உறுப்புகள் நோய் தங்கும் புகலிடமாக மாறி நாளடைவில் நோயாளியாக, நடை பிணமாக சமுதாயத்தில் வாழும் அவலநிலை உருவாகின்றது (Sundararasan, 2015). தேவைக்கு அதிகமாக வைத்திருப்பவன் திருடன் என மகாத்மா காந்தியும், உன்னிடம் இருப்பவற்றை பிறரோடு பகிர்ந்துகொள் என இயேசு கூறியதையும் வலியுறுத்தி ஒருவன் செய்கின்ற தீயச்செயல்களே அவனது நோய்க்கு ஆணிவேராக இருந்து நோயாக உடபெல்லாம் பரவி வளர்கின்றது என்பதை கித்தேரியம்மாள் போதிக்கின்றாள் (Sundararasan, 2009).

## பொறாமை தன்னையும், சுற்றத்தையும் அழித்து விடும்

அன்பிற்கு எடுத்துக்காட்டு குடும்பம்.தாய், தந்தை, சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர் என அன்பு பல்வேறு பரிமாணங்களில் பகிரப்படுகின்றது. சகோதரர்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று. அன்பு குடும்பங்களிலிருந்து சமுதாயத்திற்கு எடுத்துச்செல்லப்படுகின்றது.

"தீயாயாச்சினந்து தெரிந்து வனஞ்

சென்ற தன் தம்பியைக் கொன்ற பொல்லாக

காயீனு நொண்டி என்போல் கொலை

கற்றவரை எல்லாம் பெற்ற பிதா"

குடும்பங்களில் இந்த அன்பு வெறும் காணல் நீராகவே காணப்படுகிறது.பொறாமை என்னும் நெருப்பானது சிறிது சிறிதாக புகைந்து திடீரென கோபமாக உருவெடுத்து கொலை செய்யவும் துணிகின்றது (Kumariseliyan, 2018). சகோதர, சகோதரி என்பதை விட பகைவனை பழிவாங்குவது போன்று தனது உடன்பிறப்பினையே பழிவாங்குவது சமுதாயத்தில் அன்றாடம் நிகழ்கின்றது. முதல்பெற்றோர் அமைத்த அழகான குடும்பத்தில் நமது முதல்சகோதரர்கள் பொறாமையினால் கொலை செய்ததையும் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் குறிப்பிடுகின்றார்.

முதல் பெற்றோருக்கு காயின், ஆபேல் என்ற இரு சகோதரர்கள் இளையவன் ஆபேல் இறைவனுக்கு தனது கால்நடைகளில் சிறந்தவற்றையும் முதற்கன்னியையும் காணிக்கையாக்குகின்றான்.இறைவன் ஏற்றுக்கொள்கிறார்.ஆனால் அண்ணன் காயின் தனது விளைச்சலில் ஒதுக்கப்பட்டதையும், பூச்சிகள், விலங்குகள், பறவைகள் அனைத்தும் சிதைத்தவற்றை காணிக்கையாக்குகிறான். இறைவன் அவனது காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை.எனவே தம்பி ஆபேல் மேல் பொறாமை எழுகின்றது.நாளடைவில் பொறாமை என்னும் தீ கோபத்தை உருவாக்கி, தம்பியை ஏமாற்றி, அவன்மேல் பாய்ந்து கொலை செய்கின்றான்.

## காமவெறியும், இச்சைக்கொண்ட கண்களும்

காமத்தினால் வாழ்வை இழந்த சிம்சோன் ஒரு ஞான நொண்டி ஆவான். அவனே தனக்கு சிற்றப்பன் ஆவான் என தானும் ஒரு பாவி என்று ஏற்றுக் கொள்கின்றார். இதனை,

“காமப்பரத்தையால் இரு

கண்ணை இழந்த பழிவாங்குஞ்

சிமசோனு நொண்டியுந்தான் எந்தன்

சிற்றப்பனே பெயர் பெற்றப்பனே”

இஸ்ரயேலில் தெய்வ பயம் கொண்டு ஊழியம் செய்த பெற்றோருக்கு முதுமைக்காலத்தில் பிறந்தவன் சிம்சோன். தாயின் கருவிலே இறைவனால் ஆசிர்வதிக்கப்பட்டவன் (Kumariseliyan, 2018). இறைவனுக்கு என்றே தேர்ந்தெடுக்கப்பட்டவன். உலகத்தில் உள்ள அனைவரைக்காட்டிலும் வலிமையுடையவன். இன்றுவரை இவனைப் போன்று வலிமையுடைய ஆண்மகன் பிறந்ததில்லை என்று போற்றுதற்கு உரியவன். ஆனால் பெற்றோரின் சொல்லை மதிக்காமல் இச்சைக் கொண்ட கண்களையே நம்பி விலைமாதரோடு வாழ்ந்து, பகைவர்களால் கண்களை இழந்தான். அடிமையாக இழுத்துச் செல்லப்பட்டான். பெலிஸ்தியர்களை அழிக்கவே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிம்சோன் காமவெறியும், இச்சையும், கொண்ட தவறான வாழ்வால் வலிமை இழந்து, பகைவர்களின் கைகளில் அகப்பட்டு இறுதியில் கண்களை இழந்து, உயிரையும் இழந்தான். தவறான உறவுகளால் சமுதாயம் அழிவை நோக்கி நகரத்தொடங்கும் என இப்பாடல் உணர்த்துகின்றது.

## பிறன் மனைவியையும், உடைமையையும் கவர்ந்து கொள்ளுதல்

இறைவன் மோயிசனுக்கு தந்த பத்துக்கட்டளைகளில் ஒன்று பிறன் மனைவி மற்றும் உடைமைகளை கவராதிருத்தல்,

“அரசான தாவீது

உரியாவைக் கொண்டங்கவன் தேவியரைப்

பரிவாய்ச்சிறையெடுத்த ஞானப்

பாட்டாளி எந்தன் கூட்டாளி’

ஆடு மேய்க்கும் சிறுவனான தாவீதை இறைவன் தேர்ந்தெடுத்து, திருப்பொழிவு செய்து, இஸ்ரேல் மக்களுக்கு மன்னனாக அமர்த்தினார். அவனுக்கு மனைவிகள், வேலைக்காரர்கள் என பலரை அவன் கையில் ஒப்படைத்திருந்தார் (Kumariseliyan, 2018). ஆனால் தாவீது பெண்ணாசைக் கொண்டு தனது படைவீரனின் மனைவி எனத்தெரிந்தும் உரியாவை கொன்று பெத்யோவை மனைவியாக்கி கடவுள் முன்னிலையில் பாவம் செய்து ஞான நொண்டியானான். இதனால் தனது மனைவியினால் ஏளனப்படுத்தப்பட்டான். அரசாட்சியினை இழந்தான். பாவத்தினால் பெற்றடுத்த மகனையும் இழந்தான். தனது எதிரி கூசா என்பவனால் பழித்துரைக்கப்பட்டான்.எனவே தாவீது தனது ஞானப் பாட்டாளி என்றும் தனது கூட்டாளி என்றும் ஆசிரியர் கூறுகின்றார். பெண்ணாசையால் நாட்டையும்,

அரசாட்சியினையும் இழந்த பல அரசர்களின் வரலாற்றை நம் காப்பிங்களும், இலக்கியங்களும் பதிவு செய்கின்றன.

## பொருளாசை

சமுதாயம் வறுமையாலும், ஏழ்மையினாலும், இல்லாமையினாலும் அல்லல்படுவதற்கு காரணம் மனிதன் தேவைக்கு அதிகமாக ஆசைப்பட்டு பொருளை சுயநலத்தோடு பலதலைமுறைகளுக்கு சேர்த்து வைப்பதே காரணம். ஞான நொண்டி நாடகத்தில் ஆசிரியர் கெகாசி என்னும் பாத்திரத்தைப் பற்றி மிகவும் அழகாகவும் சுருக்கமாகவும் குறிப்பிடுகின்றார். இந்நிகழ்ச்சியினை விரிவாக திருவிவிலியம் அரசர்கள் ஆகமத்தில் கூறப்படுகின்றது.

"கெயாசி நொண்டியுமே பொய்க்குக்

கெட்டிக்காரன் களவிட்டுக்கொள்வான்

தாயாதி அண்ணன் மகன் கெட்ட

சண்டாளன் வெண்குட்டங் கொண்டானே"

கெகாசி எலிசா இறைவாக்கினாரின் வார்த்தையை மீறி நாமானிடம் பொருள்களையும், அன்பளிப்புகளையும் பெற்றுக்கொள்ளுதல் (Kumariseliyan, 2018). இத்தகைய பொருளாசைக்காக நாமானைப்பிடித்திருந்த தொழுநோய் இவனையும் இவன் வழிமரபினரையும் பிடித்தது. பொருளாசை, திருட்டுக்குணம், உண்மையை மறைத்தல் போன்றவைகளை ஞான நொண்டிகளாக சித்திரக்கின்றது.

பொய்க்கு கெட்டிக்காரன், களவிட்டுக்கொள்வான் என்ற வரிகள் கெயாசி பொய் கூறுவதிலும், திருடுவதிலும் பயமற்று செயல்படுவன் என்பதை வலுப்படுத்துகிறது. தாயாதி அண்ணன் மகன் கெட்ட சண்டாளன் என்னும் வரிகள் கெயாசி புரியும் தீயச்செயல்களால் தனக்கு தாய்வழி அண்ணன் மகன் என உறவுக்கொண்டாடுகிறார். கெயாசி தன்னைவிட பெரிய பாவி அல்ல. தானும் அவரைப்போன்றே ஞான நொண்டி எனவும் இயேசுவின் அருளும், பாவ மன்னிப்பும் தேவைப்படுகிறது என்பதை உணர்வதை அறிய முடிகிறது.

வெண்குட்டங் கொண்டார்களே என்னும் பாடல்வரிகள் நாமன் தொழுநோயிலிருந்து இறைவாக்கினர் 'எலியா' அவர்கள் மூலம் குணமடைந்தான். நாமான் சிரியா அரச பணியான் எனவே தனது நாட்டிலிருந்து கொண்டு வந்த பொன், வெள்ளி, அன்பளிப்புகள், செல்வங்கள் அனைத்தையும் இறைவாக்கினர் எலியா ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை அறிந்த எலியாசின் சீடரான கெயாசி மறைவாக நாமானிடம் சென்று தனது குரு எலியாஸ் அன்பளிப்புகள், பொன், வெள்ளி, போன்ற பலவித பொருட்களை கேட்டார் எனக் கூறி பெற்றுக்கொள்கிறான். ஆனால் இறைவனால் தண்டிக்கப்பட்டு அவனது வழிமரபினரும் இந்த தொழுநோயினால் பீடிக்கப்பட்டுகின்றனர்.

இதன்மூலம் ஒருவர் செய்யும் தீச்செயல் அவனது தலைமுறையினரையும் தண்டிக்கும் என்பது புலனாகிறது. எனவே குற்ற பழியற்ற சமுதாயத்தை உருவாக்க பொய், திருட்டு, உண்மையை திரித்தல் போன்ற குற்றங்களிலிருந்து விடுபட வேண்டும்.

## சத்தியம் என்னும் கச்சை

ஞான நொண்டி நாடகம் என்னும் சிற்றிலக்கியத்தின் ஆசிரியர் ஞான நொண்டி அரங்கிற்கு வரும் தோற்றத்தை அழகாக வருணிக்கிறார்.அவன் அணிந்திருந்த உடைகள், அணிகலன்கள் ஏந்தியிருந்த கருவிகள் அனைத்தையும் இயேசுபெருமான் போதித்த மதிப்பீடுகளாக உருவகப்படுத்துகிறார்.

"சத்தியத்தின் கச்சையரைக் கட்டி ரட்சிப்பின்

தலைச்சோடும் நீதியின் மார்க்கவசமும் கட்டிச்

சுத்த மறைத்தொப்பரங்கால் தொட்டு நொண்டித்

தொந்தோம் என்றாடிக் கொள்ளத்தூயங்கட்டினானே"

சத்தியத்தின் கச்சையைக்கட்டி என்ற வரிகள் உண்மை என்னும் மதிப்பீட்டை எவனொருவன் இடுப்பில் கச்சையாக கட்டுகின்றானோ அவனது வாழ்வு பாவ, பழிக்குற்றத்திலிருந்து காப்பற்றப்படும் (Kumariseliyan, 2018). இயேசுவே உண்மையாகவும், சத்தியமாகவும் திகழ்கிறார். தனது படிப்பினைகளிலும் உண்மை ஒருவனுக்கு விடுதலைத்தருகின்றது என்கிறார்.

## மீட்பு எனும் தலைமகுடம்

இறைஇயேசு மீட்பு அளிப்பவராக இருப்பதனால் மீட்பினைப் பெற்றுகொண்ட ஒவ்வொருவரும் அதனை தலை மகுடமாக சூடிக்கொள்ளவேண்டும். எனெனில் மீட்பு ஒன்றே சமூகத்திற்கு மகிழ்ச்சியைத் தரும்.

"ரட்சிப்பின் தலைச்சோடும்"

என்னும் வார்த்தைகளின் வழியே இயேசுவை ஏற்றுக்கொள்கிறவனுக்கு அவருடைய வார்த்தைகள் மீட்பாக திகழ்கிறது (Kumariseliyan, 2018). அதுவே அவனை வாழ்வில் சிறப்பு செய்யும் தலை மகுடமாக திகழ்கிறது என்பதை ஆசிரியர் 'ஞான நொண்டி நாடகம்' என்னும் நூலில் தெளிவுப்படுத்துகின்றார். மனந்திருந்திய சக்கேயுவினைப்பார்த்து இயேசு மகிழ்ச்சியடைகின்றார். மீட்பினை அளிக்கின்றார். அனைவர் முன்னிலையிலும் பாவத்திலிருந்து சக்கேயு விடுதலை அடைகின்றான். அவனோடு அவனது குடும்பமும் மீட்பினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

## நீதி என்னும் மார்க்கவசம்

நீதியோடு வாழும் வாழ்க்கையானது ஒருவனை சமூகத்தின் பல்வேறு அடிமைக் கட்டுக்களிலிருந்து விடுதலையளிக்கின்றது. இதனை,

"நீதியின் மார்க்கவசமும் கட்டி"

என்று ஆசிரியர் கூறுவது போன்று நீதி ஒருவருக்கு மார்க்கவசமாக அணியப்பட வேண்டும் (Kumariseliyan, 2018). நீதியோடு வாழும் வாழ்க்கை மட்டுமே பாதுகாப்பினைத் தருவதோடு குற்ற உணர்விலிருந்து காப்பாற்றும். இயேசு தனது போதனையில் பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே என நீதியோடு வாழும் மதிப்பீட்டினை வலியுறுத்துகிறார் (Gnana Chandra Johnson, 2009).

## நம்பிக்கை என்னும் கேடயம்

'விசுவாசங்கேடையங்கைக் கொண்டு' என்னும் பாடல் வரிகள் நம்பிக்கையை கேடயமாகக் கொண்டு அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இயேசுவின் மேல் நம்பிக்கைக்கொண்டு எதிர்கொள்ள வேண்டும் என ஆசிரியர் இங்கு நினைவுறுத்துகிறார். இதனை,

"விசுவாசங் கேடையங் கைகொண்டு வானில்

வெட்ட வெளியாய் நிறைந்தோன் பட்டையமுங்

கொண்டு - சுசிகர ஞானங்களுங்கொண்டு நொண்டி

தொந்தேரம் என்றாடிக் கொள்ளத் தூயமங்கட்டினானே"

இயேசுவின் மேல் உள்ள நம்பிக்கை மட்டுமே செழுமையான வாழ்வினை சுவைக்க உதவும். துன்பங்களை மேற்கொள்ள வலிமைக்கிடைக்கும். இத்தகைய நம்பிக்கையை சீடர்கள் இழந்த போது இயேசு அவர்களைக்கடிந்துக் கொண்டார் (Kumariseliyan, 2018).

கிறித்துவ வாழ்க்கைக்கு அச்சாணியாக இருப்பது நம்பிக்கையாகும். நம்பிக்கையில் வளரும் குழந்தைகள் சமுதாயத்தை அவநம்பிக்கை, பயத்திலிருந்து வெளிக்கொணர்வார்கள்.

## முடிவுரை

கிறித்தவ சிற்றிலக்கியங்கள் தன்னிடம் இருப்பதை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதில் வல்லவராக விளங்கும் மேலான தத்துவத்தை தெளிவுப் படுத்துகின்றது. இறைமகன் இயேசு பெருமான் யாரையும் புண்படுத்தியதில்லை; ஒதுக்கியதில்லை. இன்று மனித இனம் சாதியினால், பொருளாதார ஏற்றுத்தாழ்வுகளால் உருக் குலைந்து காணப்படுகிறது. இவ்வேற்றுமை மாறி மனுக்குலம் ஒற்றுமை பெற இயேசு குறிப்பிடும் மதிப்பீடுகள் சமூகத்தில் விதைக்கப்பட வேண்டும். தாழ்மையை கற்றுக்கொடுக்க விரும்பிய இயேசு பெருமான் தன் சீடர்களின் கால்களைக் கழுவினார். எல்லா மக்களையும் சமமாக மதிக்க வேண்டும் என எண்ணி மக்களால் வெறுக்கப்பட்டவர்களாகிய வரிவசூலிப்பவர்கள், சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட பாவிகளுடன் அமர்ந்து சமபந்தி உணவு உட்கொண்டார். ஏழை எளிய மக்களுக்கு பலனை எதிர்பார்க்காமல் பல நன்மைகள் செய்து, தம் சீடர்களும் அவ்வாறே செய்யத் தூண்டியதை கிறித்தவ சிற்றிலக்கியங்கள் உணர்த்துகின்றன. சமூகத்தில் எங்கு பார்த்தாலும் சுயநலம், நயவஞ்சகம், போட்டி மனப்பான்மை, பொறாமை, பொய்யுரை, திருட்டுக்குற்றங்கள், கொலை, கொள்ளை என பழிபாவங்கள் மலிந்து கிடக்கின்றன. கிறித்துவச் சிற்றிலக்கியங்கள் சமூகம் மேற்கண்ட தீமைகளிலிருந்து விடுதலைப் பெறுவதற்கு இயேசு காட்டும் மதிப்பீடுகளை சமூகத்தில் விதைத்தால் சமூகம் புதிய வாழ்வினைப் பெறும், தீமைகள் மறையும் எனக்குறிப்பிடுகின்றது. இயேசு காட்டும் மதிப்பீடுகளான உண்மை, நீதி, மீட்பு, அன்பு, சமாதானம், நேர்மை, நம்பிக்கை மற்றும் மன்னித்தல் போன்றவை சமூகத்தை பல்வேறு கட்டுகளிலிருந்து விடுதலையாக்கும் என இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

## References


Gnana Chandra Johnson, Y., (2009) Krishthuva Tamilkodai, Meyyappam Tamilayvakam, Sidambaram, India

Kumariseliyan, (2018) Gnana Nondi Natakam, Saradha Pathippagam, Chennai, India.

Sundararasan, S., (2009) Bedhlagem Kuravanji, Mullai Nilayam, Chennai, India.

Sundararasan, S., (2015) Kitheriyammal Ammaanai, Mulai Nilaiyam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License